திரு. பொ. காளியப்பன் : பேரவைத் தலைவரவர்களே, அண்ணாவால் அடிக்கல் நாட்டப்பட்ட அந்த நகராட்சிக் கட்டிடம் கிட்டத்தட்ட 9 ஆண்டுக் காலமாக அப்படியே இருக்கிறது. அதை இந்த அரசாவது கடன் கொடுத்து அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தற்போது ரூ. 2 இலட்சம் மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு, அந்த அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சென்னை மாநகராட்சியுடன் ஊராட்சிகள் இணைப்பு.

*வினா எண். 113 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையைச் சுற்றியுள்ள ஊராட்சிகளை சென்னை மாநகராட்சியுடன் இணைக்கும் திட்டத்திற்கு சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிடமிருந்து எதிர்ப்பு ஏதேனும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: கானகம்-தரமணி, விருகம்பாக்கம், சாலிக் கிராமம், எருக்கஞ்சேரி ஆகிய நான்கு பேரூராட்சிகள் எதிர்ப்புகள் தெரிவித்துள்ளன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, 4 ஊராட்சிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதன்மீது அரசு என்ன மேல் நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ? அதைப் போலவே சென்னை நகராட்சியை விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ் பல பகுதிகளைச் சேர்ப்பதாகத் தெரிகிறது. அப்படி சேர்க்கப்படுவதன் அடிப்படை நோக்கத்தினை அரசு அறிவிக்க இயலுமா ? எந்தெந்தப் பகுதிகள், விரிவு படுத்தப்படுகிற பகுதிகளாக ஆக்கப்படுகிற நேரத்தில் புதிதாகச் சேர்க்கப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்தப் பேரூராட்சிகளின் எதிர்ப்பை நிராகரித்து 29—5—1978 ஆம் நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை (பல்வகை) 790-ல் இணைப்புக்கான இறுதி ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. சென்னை மாநகர எல்லையுடன் வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ள புறநகர் திட்டப் பகுதிகளை இணைப்பதற்கான செயற் குறிப்பை வீட்டுவசதி வாரியம் 1962-லும், 1970-லும் அனுப்பியது. அந்தச் செயற்குறிப்பு வந்த பிறகுதான் அதிலே 12 பேரூராட்சிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

1978 செப்டம்பர் 9]

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தை விரிவு படுத்துகிற திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள், அந்தந்தப் பேரூராட்சிப் பகுதியிலே உள்ளவர்கள் அதிக வரி செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் ; அந்த வரியை அவர்களாலே தாங்க முடியாது என்ற அடிப்படையிலே தான் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். இது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்ததா ? ஆமெனில், உரிய விதத்திலே அவர்களுக்குப் பரிகாரம் காணப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : விதிக்கின்ற அந்த வரிக்கு ஈடாக வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

திரு. க. அன்பழகன் : வளர்ச்சிப் பணிகள் என்பது 10 ஆண்டுக்காலம், 20 ஆண்டுக் காலம் ஆகியும் புறநகர்ப் பகுதியிலே நடைபெறாமல் இருந்திருக்கிறது. ஏற்கனவே அப்படித்தான், இனியும் அப்படித்தான் ஏற்பட முடியும். எனவே, ஏற்படுகிற தாமதத்தையொட்டி, முன்னாலேயே வரி வசூலிக்காமல் இருக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த மக்களுடைய முறையீட்டை உரிய வகையிலே பரிசீலித்து நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வடலூர், சேஷசாயி தொழிற்சாலைத் தொழிலாளர்கள்.

*வினா எண். 114—திரு. சி. ராமநாதன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள வடலூர், சேஷசாயி தொழிற்சாலையில் சென்னை டி.சி.எல். அவர்கள் முன்னிலையில் 10–3–1978 அன்று அங்கீகரிக்கப்பட்ட சங்கம் என்ற பெயரால் சிறுபான்மை தொழிற்சங்கத்துடன் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் சிறுபான்மை தொழிற் சங்கத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.